# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### இந்தியா முன்னெடுக்கும் செயற்கை அவயங்கள் பொருத்தும் முகாம்

கம்பஹா மாவட்டத்தில் உள்ள ரணவிரு சேவை அதிகாரசபையின் வளாகத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விகும் லியனகே ஆகியோரது பிரசன்னத்துடன், 1000 இலங்கையர்களுக்கு செயற்கை அவயவங்களை வழங்கும் முகாம் ஒன்று இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ பிரமித்த பண்டார தென்னக்கோன் ஆகியோரால் 2024 மே 07 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

2. கொழும்பு மற்றும் வவுனியா மாவட்டங்களில் இரு மாத காலப்பகுதிக்கு இந்த முகாம் நடத்தப்படவுள்ளதுடன் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள பொதுமக்கள் மற்றும் பாதுகாப்பு பிரிவினருக்கு இதன்மூலமான சேவைகள் வழங்கப்படும். இதன் மூலமாக நன்மைபெறும் பொதுமக்களின் விபரங்கள் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் ஊடாக பெறப்பட்டிருந்தது.

3. இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் நடைபெறும் இந்த முகாமானது விசேட தேவையுடையவர்களின் உடல் மற்றும் சமூக பொருளாதார புனர்வாழ்வு ஆகியவற்றுக்காக சேவையாற்றும் இந்திய அரச சார்பற்ற நிறுவனமான பஹவான் மகாவீர் விக்லங் சகயதா சமிதி (BMVSS) மூலமாக நடத்தப்படுகின்றது. ஜெய்ப்பூரை தளமாகக் கொண்ட குறித்த அரச சார்பற்ற நிறுவனமானது 1975 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டதுடன் விசேட தேவையுடவர்களுக்கான செயற்கை அவயங்களைப் பொருத்துதல் மற்றும் அதற்கான ஏனைய உதவிகளை வழங்கும் உலகின் பாரிய அமைப்பாகும்.

4. இலங்கையில் இதேபோன்ற நான்கு முகாம்கள், 2010 மார்ச் – ஏப்ரல் ஆகிய காலப்பகுதியில் வவுனியா, 2011 செப்டெம்பரில் யாழ்ப்பாணம், 2022 பெப்ரவியில் யாழ்ப்பாணம் – கொழும்பு ஆகிய இடங்களில் BMVSS அமைப்பினால் நடத்தப்பட்டிருந்தமை நினைவில் கொள்ளத்தக்கது. இம்முகாம்கள் மூலமாக அக்காலப்பகுதியில் 3100 பேர்

பயனடைந்ததுடன் 2200க்கும் அதிகமானோர் ஜெய்ப்பூர் கால்களைப் பெற்றிருந்தனர்.

5. இந்த முகாமின் ஆரம்ப நாளில் உரை நிகழ்த்தியிருந்த உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா அவர்கள் இலங்கை மக்களுக்காக இந்தியா கொண்டிருக்கும் உறுதியான அர்ப்பணிப்பை வலியுறுத்தியிருந்தார். அத்துடன் மக்களின் வாழ்வில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை உருவாக்குவதில் இந்திய இலங்கை பங்குடைமையின் திடமான பெருமுயற்சியினையும் குறித்த செயற்கை அவயவங்களை பொருத்தும் முகாம் விஸ்தரிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

***********

**கொழும்பு**
**8 மே 2024**